RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s851

OPEN ACCESS

# அகநானூற்றில் வாழ்வியல்

சு. முருகலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி- 628002, தமிழ்நாடு, இந்தியா.

# Life in Akananooru

S. Murugalakshmi [a, *]

[a] Depaertment of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: murugalakshmi71@gmail.com

Received: 18-04-2021
Revised: 01-06-2022
Accepted: 08-06-2022
Published: 20-08-2022

Check for updates

## ABSTRACT

The people of the Sangam age lived their lives by dividing them into Akam and Puram. These two divisions were unique to the Tamils. The Akam songs of the Ettutthokai (The Eight Anthologies) and Patthuppattu (The Ten Idylls) are dominated by akam songs. The people of the Sangam age loved their lives by dividing them into Akam and Puram. In Akam's life, they had two kinds of methodology: immoral and chastity. The Tamil society, which fell in love, was transformed into a chaste society through the ritual of marriage. In a chastity society, domesticity is foremost. Akananooru says that righteousness is domestic life. Marriage is fundamental to marital life. The like-minded man and the woman get married to start a marital life. The need for material wealth is evident in the men of those who enter into marriage. The man did not return on time when he went in search of goods. The friend consoles the grieving woman and tries to console her. Having the gift of children means having the best children. They have good children in domestic life. Marriage created unshakable life beliefs in the lives of Tamils. Moreover, through this marriage, children are better talked about. This article deals with the virtues of wealth, hospitality, worship of God, discernment, charity, food, memorial stone worship, and heroism.

**Keywords:** Akananooru, Hospitality, Worship, Charity

## முன்னுரை

சங்க இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பழந்தமிழரின் வாழ்வியலை பிரதிபலிக்கின்ற ஓர் அரியப் பெட்டகம். எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமாகிய தொகுப்பே சங்க இலக்கியம் என்று கூறுவர். எட்டுத்தொகையில் தலைசிறந்து விளங்கும் நூல்களுள் ஒன்று அகநானூறு. அக நூல்கள் பல இருந்தாலும் அகம் என்ற சிறப்பிற்குரிய இந்நூல் 13 முதல் 31 அடி வரையிலான நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூல் நெடுந்தொகை, பெருந்தொகை என்னும் பெயர்களாலும் வழங்கப்படுகிறது. களிற்றுயானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக் கோவை என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்கிழார் மகன் உருத்திரசன்மனார். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆவார். இந்நூல் பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றையும் சமூக வரலாற்றையும் அறிய பெருந்துணை செய்ய வல்லது. மக்களின் வாழ்க்கை பழக்கவழக்கங்கள் பற்றிய அரிய செய்திகள் இங்கு கூறப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் அகநானூற்றில் வாழ்வியல் கருத்துகள் குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருமணம்

பண்டைக் காலத்தில் ஒருவனும் ஒருத்தியும் தனியே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு சிறிது காலம் களவு வாழ்க்கை நடத்துவார்கள். பின்னர் பலர் அறியும்படியாக மணம் செய்துகொண்டு கற்பு வாழ்க்கை மேற்கொள்வர். தலைவன் விரும்பி தலைவியை வாழ்க்கைத் துணையாக ஏற்றிடத் தலைவியின் பெற்றோர் கொடுப்பதைக் காட்டும் அடையாள நிகழ்வுதான் திருமணம். இத்திருமணம் நிகழ்ந்த முறையைப் பற்றி அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. இதனை,

"புள்ளுப் புணர்ந்து இனிய ஆக, தெள ஒளி

அம்கண் இருவிசும்பு விளங்க திங்கட்

சகடம் மண்டிய துகள்நீர் கூட்டத்து

கடிநகர் புணர்ந்து கடவுட் பேணி

படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ

வதுவை மண்ணிய மகளிர் விருப்புற்று

பூக்கணும் இமையோர் நோக்குபு மறைய"

என்ற பாடலில் உணர்த்துகிறது (Puliyur Kesigan, 2010). திங்களும் ரோகிணியும் கூடிய நன்னாளில் வைகறைப் பொழுதில் திருமணம் நிகழ்ந்தது. பந்தல் போட்டு அதில் புதுமணல் பரப்பி நல்ல விளக்கு ஏற்றினர். புள் சகுனம் பார்த்து திங்கள் ரோகிணியோடு கூடிய நன்னாளில் வீட்டை அழகுபடுத்தினர். நெய்யுடன் கூடிய நன்றாகப் புழுங்கிய வெண்சோறு படைக்கப்பட்டது. தலையில் குடத்தை உடையவர்களும் அகல்விளக்கு ஏற்றி தலையில் தாங்கியோரும் பெரிய ஆரவாரத்தோடு பந்தலுக்கு வந்தனர். கற்பினின் வழாது நற்பல் உடைய இழையணிந்த மகளிர் வாழ்த்தியதோடு நீரில் நெல்லும் மலரும் கலந்து மணமகளை நீராட்டினர். அப்போது பெண்கள் கூட்டம் பேரிற் கிழத்தி ஆக, என வாழ்த்தி பின்னர் பெற்றோர் மணமகளைத் தலைவனிடம் ஒப்படைத்தனர் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

## செல்வத்தின் சிறப்பு

இல்லறம் இனிமையாக நடைபெறுவதற்கு செல்வம் வேண்டும். பொருளீட்டும் பொருட்டே தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். பாலைத்திணையில் உள்ள பாடல்கள் இக்கருத்தினை உணர்த்துகின்றன. கற்புமணம் புரிந்து இல்லறம் நடத்துங் காலத்திலும் காதலன் பொருள்தேடப் புறப்பட்டுப் போவான். களவு மணம் நிகழும் காலத்தும் 'பொருள்தேடிக்கொண்டு வந்த பிறகு மணம் செய்து கொள்கிறேன' என்று தலைவிக்கு உறுதிமொழி அளித்துப் பிரிந்துச் செல்வான்.

பாவங்களைச் செய்யாமல் தர்மத்தை பின்பற்றி நடக்கும் வாழ்க்கையும், ஒருபொழுதும் பிறருடைய வாசற்படியிலே போய் நின்று இரக்காத செல்வமும் ஆகிய இரண்டும் பொருளால்தான் உண்டாகும் என்பதை,

"அறன்கடை படாஅ வாழ்க்கையும் என்றும்

பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்

பொருளின் ஆகும்" (Puliyur Kesigan, 2010)

தலைவன் சொல்லிச் சென்ற காலம் வராததால் வருந்திய தலைவியை தோழி ஆற்றுவிக்கும் வகையில் அகநானூற்றில் இடம்பெற்றுள்ள முள்ளியூர்ப்பூதியாரின் பாடல் பின்வருமாறு,

"அறம் தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த

கேளிர் கெடு பல ஊன்றலும், நாளும்

வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்"

அறநெறியினின்று தவறாது இல்வாழ்க்கை நடத்துவதும் சிறந்த சுற்றத்தாரின் பலவகைத் துன்பங்களைத் தாக்குவதும் ஆகிய இவை எப்பொழுதும் முயற்சி மேற்கொண்டு வருந்தாது சோம்பிய உள்ளத்துடன் இருப்பவர்க்கு இல்லையாகும் என்று கருதி நம்தலைவர் பொருள் ஈட்டும் வினையை விரும்பிச் சென்றுள்ளார் (Puliyur Kesigan, 2010).

பொருள் வல்லமைத் தருவது. அது இருந்தால்தான் அறமெல்லாம் தரும். பிறரிடம் கையேந்த வேண்டாம். பகைவரை வாட்டலாம். உற்றார்க்கு உறுபொருள் தந்து உதவலாம். துன்பம் போக்கலாம். இவை இல்லத்தில் சோம்பி இல்லாமல் பொருள் தேடிச் செல்வோர்க்கே அமையும். தேடி நிதம் சேர்த்தால் நம்மை நாடி வருவோரின் வறுமை போக்கலாம் என்பது பொருளின் வல்லமை ஆகும் என்பதை,

"செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந்தோர்க்கு

உறும் இடத்து உய்க்கும் உதவி ஆண்மையும்

இல்லிருந்து அமைவோர்க்கு இல்"

என மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் பாடல் வழியாக அறியலாம் (Puliyur Kesigan, 2010).

## மக்கட்பேறு

இல்லற வாழ்க்கையில் சிறந்த பேறாக உள்ளது மக்கட்பேறு. எவ்வளவுதான் பெருஞ்செல்வம் இருந்து இன்பமாக உண்டு உடுத்தி வாழ்ந்தாலும் மக்களைப் பெறாதவர் வாழ்வு சிறந்ததாக இல்லை. புதல்வரை குடிக்கு விளக்கு என்று போற்றினர். இப்பிறவிக்கும் மறுபிறவிக்கும் இன்பம் பெறுவோர் புதல்வரைப் பெற்றவர் என்பது பழமொழியாகக் கூறுவர். இதனை,

"இம்மை உலகத்தும் இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறு இன்று எய்துவ

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர் பயந்த செம்மலோர் என்ப

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

வாயே ஆகுதல் வாய்த்தனம்"

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றது (Puliyur Kesigan, 2010). அறிவு நலம் பெற்ற மக்களைப் ஈன்ற தாய் தந்தையரை உலகம் போற்றி புகழ்ந்தது.

## இறைவழிபாடு

இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மனிதன் இயற்கையை வழிபடத் தொடங்கினான். தன் செயல்களின் நன்மை தீமைகளுக்கு இயற்கையே காரணம் என்று நம்பினான். இதன் அடிப்படையில் மரம், மண், கடல், சுனை போன்ற இயற்கைப் பொருள்களைத் தெய்வம் என்று நம்பிக்கொண்டிருந்தான். இதனை,

"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்"

"சூர்புகல் அடுக்கத்து மழைமாறு முழங்கும்"

என்ற பாடல் வரிகள் நாம் அறியலாம் (Puliyur Kesigan, 2010).

## நடுகல் வழிபாடு

தமிழர்கள் காதலையும் வீரத்தையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் பாவித்துள்ளனர். வீரத்தைப் பெருமையாகப் போற்றி பழந்தமிழ் மக்கள் போரிட்டு இறந்த வீரர்களுக்கு நன்றி கூறும் விதமாக நடுகல் நட்டு வழிபட்டனர் இதனை,

"காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று

இந்த மூன்று வகையிற் கல்லொடு புணர"

என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் (Ilampuranar, 2005).

"விழுந்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர்" (Puliyur Kesigan, 2007)

என்கிறது ஐங்குறுநூறு. மலைபடுகடாமும்,

"பெயர் மருங் கறிமார்

கல்லெறிந்தெழுதிய நல்லரை மராஅத்த

கடவுள்"

என்கின்றது (Nagarasan, 2004).

போரில் தம் வீரத்தைக் காட்டிய வீரர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஒரு படை பயந்து ஓடுகின்ற போது ஒரு வீரன் தோன்றி அந்த படைக்கு முன் சென்று பகைவரை தாக்கி இறுதியில் பகைவர் தாக்குதலால் மரணமடைகின்றான். அத்தகைய வீரத்தை உடைய வீரனை அவனைச் சார்ந்த வீரர்களும் மற்றும் அரசரும் பாராட்டுவர். அவன் இறந்த இடத்தில் அவனின் வீரத்திற்கு அறிகுறியாக ஒரு கல்லை நடுவர். அந்தக் கல்லில் அவனது உருவம் பொறிக்கப்படும். அந்த உருவத்திற்குக் கீழ் அவன் பெயரும் வீரச்சிறப்பும் குறிக்கப்படும். அக்கல்லின் மீது மயிற்பீலி சூட்டப்படும். கல் நடப்பட்ட அன்று அக்கல்லைச் சுற்றிலும் துணிப் பந்தல் அமைக்கப்படும். இதனை,

"உயிரிசை வெறுப்புத் தோன்றிய பெயரே

மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சுட்டி

இடம் பிறர் கொள்ளச் சிறு வழிப்

படஞ்செய் பந்தர் கண்டிசை யதுவே"

என்று புறநானூறு நடுகல்லைக் குறிப்பிடுகின்றது (Ramasubramanian, 2012). நடுகல்லிற்கு மயிற்பீலியைச் சூட்டி அவ்வீரனின் பெயரையும் குலச்சிறப்பினையும் அந்தக் கல்லில் எழுதி அவன் பயன்படுத்திய கிடுக்கினையும் வேலினையும் நட்டு வைப்பர். இதனை,

"பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சுட்டிய பிறங்கு நிலை நடுகல்

வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்"

என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது (Puliyur Kesigan, 2010). மேலும் நடுகல் வழிபாட்டினை,

"நட்டபோலும் நடாஅ நெடுங்கல்

அகலிடம் குயின்ற பல்பெயர் மண்ணி

நறுவிரை மஞ்சள் ஈர்ம புறம் பொழிய

அம்பு கொண்டு அறுத்த ஊர் நார் உரிமையின்

செம்புங் கரந்தை புனைந்தக் கண்ணி

வரி வண்டு ஆர்ப்பச் சுட்டிச் கழஞ்சால்

இளையர் பதிப்பெயரும் அருஞ்சுரம் இறந்தோர்

தைஇ நின்ற தான் பெயர் கடைநாள்" (Puliyur Kesigan, 2010)

எனவும்,

"வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்

நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்

தோப்பிக் கள்ளோடு துரூஉப் பலி கொடுக்கும்

போக்கு அருங்கவலை புலராது அருஞ்சும்"

என்று அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது (Puliyur Kesigan, 2010).

நடுகல் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது. கள், உயிர்ப்பலி போனறவற்றைக் கொண்டு நடுகல் வழிபாடு செய்துள்ளனர் என்பதையும் இப்பாடல் வாயிலாக அறியமுடிகின்றது.

## தண்டனை வழங்குதல்

தமிழர்கள் தவறு செய்யாமல் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் வாழ்ந்தனர். அவ்வாறு தவறு செய்தால் அதற்குரிய தண்டனை வழங்கியுள்ளனர். இதனை,

"தொல் புகழ் நிறைந்த பல்பூங் கழனி

கரும்பமல் படப்பைப் பெரும் பெயர்க் கள்ளூர்

திருநுதற் குறுமகள் அணிகலன் அவ்விய

அறனி லாளன் அறியேன் என்ற

திறனின் வெஞ்சூள் அறிகரி கடாஅய்

முறியார் பொங்கினைச் செறியப் பற்றி

நீறுதலைப் பெய்த ஞான்றே"

என்ற பாடல் கள்ளூரில் இளம்பெண்ணின் நலத்தைத் துய்த்த ஒருவன் அவள் யார் என்றே தெரியாது என்று பொய்க் கூறினான் (Puliyur Kesigan, 2010). ஊர்ப்பெரியவர்கள் தக்கபடி விசாரித்து இருவருக்கும் உறவு உண்டு என்பதை அறிந்தனர். காதலில் பொய் கூறிய அவனை மரத்தில் பிணித்து அவன் தலையில் சாம்பலைக் கொட்டினர். பலர் அறிய தண்டனை செய்தனர். இதன் மூலம் தவறு செய்தவன் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் என்று ஊரில் உள்ள பெரியவர்கள் நடுநிலமையைக் கடைபிடித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## விருந்தோம்பல்

செல்வமிக்க இல்லங்கள் விருந்தினர் ஒழிவு அறியாத பெரிய பந்தல்களை உடையனவாக விளங்குகின்றன. அதுபோன்றே வறிய குரம்பைகளில் வாழ்பவர்களும் வழிப்போவோரின் பசியைத் தீர்ப்பதற்காக சிதறிக் கிடந்த வரகினைத் தொகுத்துச் சமைத்து பாலோடு சேர்த்து அளித்தனர் என்பதை,

“உள்ளுவை யல்லையோ மற்றெ உள்ளிய

விருந்தொழி வறியாப் பெருந்தன் பந்தர்

வருந்தி வருநர் நம்பி” (Puliyur Kesigan, 2010)

எனவும்

“பயந்தலைப் பெயர்ந்து மாதிரம் வெம்ப

வருவழி வம்பலர்ப் பேணக் கோவலர்

மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி”

எனும் பாடல்கள் உணர்த்துகின்றன (Puliyur Kesigan, 2010). மேலும் மாடுகளை மேய்க்கச் சென்ற இடத்தில் தான் உண்ண எடுத்துச் சென்ற உணவை வழிப் போக்கருக்கு கொடுத்து வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

## பகுத்துண்டு வாழ்தல் பண்பு

அன்றைய மக்கள் ஒருவருக்கொருவர் கொடுத்து உதவி சமூக வாழ்க்கையைச் சிறக்கச் செய்தனர். வறுமை என்னும் காரணத்தினால் மன்னரை அணுகிப் பரிசு பெற்ற புலவர் கூடப் பொருளை சேமித்து வைக்காமல் பகுத்துண்டு வாழும் பண்புடையவராகக் காணப்பட்டனர். பாணன் என்பான,

“தனக்கென வாழா பிறர்க்கு உரியாளன்”

எனப் பாராட்டப்படுகிறான் (Puliyur Kesigan, 2010).

## உணவு

ஆடை அணிகளுக்கு மேலானது உணவு. உளுந்தினை நிறைக் கூட்டி சமைத்த குழைவாக வெந்த உளுந்தம் பருப்புப் பொங்கல் வழக்கத்தில் இருந்தது. இதனை,

“உளுந்துதலைப் பெய்த கொழுங்கனி மிதவை

பெருஞ்சோற்று”

அதோடு மட்டுமின்றி புளிக்கறியையும் சமைத்துள்ளனர் (Puliyur Kesigan, 2010) என்பதை,

“அமலைசெஞ்சோறு

தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து”

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது (Puliyur Kesigan, 2010).

குழம்பு பொறித்தக் கறிகளுடன் இறைச்சியால் செய்யப்பட்ட கறி வகைகளும் சேர்த்துக் கொண்டனர். நெல்லினால் சமைத்த மூரலாகிய வெண் சோற்றை அயிரை மீனை இட்டு ஆக்கி அழகிய புளிக்கறியினைச் சேர்த்துக் கொழுத்த மீன் கருவாட்டுடன் உண்டனர். இதனை,

“நெல்லின் மூரல் வெண்சோறு

அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து

கொழுமின் தடியொடு குறுமகள் கொடுக்கும்”

என்ற பாடல் விளக்குகிறது (Puliyur Kesigan, 2010).

## ஈகை

தமிழர்கள் ஈகைக் குணத்தில் சிறந்தவர்கள். அரசன் முதல் ஆண்டி வரை இப்பண்பு காணப்படுகின்றது. அகநானூற்றிலும்,

"இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்

பார்த்துத் தலைவன் ஆரநன்னன்"

என்னும் பாடல் நன்னன் பரிசிலர்க்கு களிறுகளை வழங்கும் ஈகைத் தன்மை உடையவன் என எடுத்துரைக்கின்றது (Puliyur Kesigan, 2010). மேலும்,

"வல்லினும் வல்லார் ஆயினும் சென்றோர்க்குச்

சால் அவிழ் நெடுங்குழி நிறைய வீசும்

மாஅல் யானை ஆஅய்"

என்று ஆய் அண்டிரன் தன்னை நாடி வரும் பரிசிலருக்கு அளிக்கும் ஈகைத் திறன் வெளிப்படுகிறது (Puliyur Kesigan, 2010).

தன்னிடம் உள்ளதை மறைத்து இல்லாதவருக்கு இல்லை என்று சொல்ல இயலாத உள்ளம் பலருக்கு உள்ளதால்தான் பொருள் தேடச் செல்கின்றனர் என அகநானூற்றுப் பாடலில் புலவர் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

"இல்லோர்க்கு இல்என்று இயைவது கரத்தல்

வல்லா நெஞ்சம் வலிப்ப"

தலைவன் பொருள் தேடிச் சென்றதாக அத்தலைவி கூறுகின்றாள் (Puliyur Kesigan, 2010). தன்னை நாடி வந்து இரப்போருக்கு தன்பால் உள்ளதை மறைத்து இல்லை என்று சொல்லாத உள்ளம் வேண்டும் என்று இப்பாடல் வாயிலாக அறிய முடிகின்கிறது.

## வீரம்

தமிழர்கள் காதலையும் வீரத்தையும் தன் கண்களெனப் போற்றினர். இது வீரத் தமிழர் பண்பாடாகும். பகை வேந்தர்கள் நடுங்கும் வண்ணம் போர்க்களத்தில் அப்பகையரசர்களை வென்று அவர்களின் மகுடங்களைக் கொண்டு வீரக்கழல் செய்து பாதங்களில் அணிந்துக்கொண்ட வல்லமையுடையவர்கள் நம் வேந்தர்கள். அகநானூற்றில் தித்தன் பாணனைப் பாதுகாத்தப் புகழையும், சினம் மிக்க படையையும் உடையவன். அவனைப் பெரும்படையுடன் வந்த நன்னன் வென்றான். இதனை,

"முனை முரண் உடையக் கடந்த வென்வேல்"

என்ற பாடல் வரி விளக்குகின்றது (Puliyur Kesigan, 2010).

## முடிவுரை

வாழ்க்கை கருத்துகள் வெறும் ஏட்டுச்சுரக்காய் அல்ல என்பது சங்க கால மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளுள் ஒன்று. வாழ்விற்கு அடிப்படையான மனிதநேய நெறிமுறைகளை பழந்தமிழர்கள் ஒவ்வொரு துறையிலும் வகுத்து வந்துள்ளனர். வாழ்க்கையில் நல்ல நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால் சமூகம் சிறந்த ஏற்றத்தைப் பெற்று உயரும். மனிதன் ஆறறிவு உடையவன். ஆகையால் மற்ற உயிர்கள் நடத்தமுடியாத ஓர் உயர்நிலை வாழ்வை பிற்கால மக்கள் நடத்த வேண்டும் என்று பல்வேறு கருத்துகளை வலியுறுத்தியுள்ளனர். சங்க காலத்தில் கற்பு வாழ்வு என்பது திருமணம் முடிந்து கணவன் மனைவியாக வாழும் நிலையையும் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்வதையும்

தலைவி இல்லற வாழ்க்கையை புரிந்துக் கொள்ளும் களமாகவும் அமைவதைக் காணலாம். நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு போரில் இறந்த வீரனுக்கு நன்றி செலுத்தும் விதமாக நடுகல் வழிபாடு இருந்ததை அறியலாம். தன்னை நாடி வரும் இரவலருக்கு இல்லை என்று கூறாது தன்னிடம் உள்ளதை பிறருக்கு கொடுத்து உதவும் ஈகைப் பண்பினையும் அறிய முடிகிறது. எனவே சங்ககால மக்கள் தங்களுக்கென ஒரு வாழ்க்கை நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Nagarasan, V., (2004) Pathupattu, New Century Book House, Chennai, India.

Puliyur Kesigan, (2007) Ainkurunuru, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Ramasubramanian, V.T., (2012) Purananooru, Thirumagal Nilaiyam, Chennai, India.

Sendhurai Muthu, (2010) Thirukkural, Gangai puthaga Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License